# அரச தேவைகளுக்கு ஹெலிகள் திடீரென செல்வதால் வடக்கு - கிழக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் ஹெலிகொப்டர்கள் அடிக்கடி அரச தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவது குறித்து பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. எதுவிதமுன் அறிவித்தலுமின்றி அரசின் உயர்பதவிகளிலுமுள்ள அரசியல் வாதிகளால் இந்த ஹெலிகொப்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 23 இதழ் 331
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 07 — 01 — 1993

## சந்தேகப் பேர்வழிகளை கண்டதும் தகவல் தரவும்

### — பொற்கோ வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தேசவிரோதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த மக்கள் விழிப்பாக இருப்பது மட்டுமன்றி அவர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தமக்கு தெரியப்படுத்த வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. பொற்கோ பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோண்டாவிலில்நேற்றுமாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; ஊருக்குப் புதியவர்கள் அல்லது சந்தேகத்திற்கிடமான முறையில் செயல்படுபவர்கள் ஆகியோரைக் கண்டால் அருகிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம்களிலோ அல்லது காவல்துறை நிலையங்களிலோ அல்லது உறுதிப்படுத்தப்பட்ட இயக்க உறுப்பினர்களிடமோ தெரியப்படுத்தவும்.

சைக்கிள் உட்பட சகலவாக

(4-ம்பக்கம் பார்க்க)

# சித்தன்கேணியில்சுப்பசோனிக்தாக்கு 9பொதுமக்கள்பலி;15பேர்படுகாயம்

## 10 வீடுகள் வரை சேதம்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை பகுதியை வட்டமிட்ட ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சுப்பசோனிக் விமானங்கள் இரண்டு சித்தன்கேணிப் பகுதியில் நேற்று பொது மக்களின் குடியிருப்புகளை நோக்கி நடாத்திய கொடூரத் தாக்குதலில் 9 பொது மக்கள் கொல்லப்பட்டனர் 15 க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். 10 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுப் பகல் 11-05 மணியளவில் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை, சித்தன்கேணி பகுதிகளை மையமாகக் கொண்டு வட்டமிட்ட இரு சுப்பசொனிக் விமானங்கள், சுமார் 11-20 மணியளவில் ரொக்கட் மோட்டார், 50 கலிபர் தாக்குதல்களை நடத்தின.

வலிகாமம் பகுதியில் இதுவரை நடைபெறாத அளவிலான மிகப் பயங்கரமான இத் தாக்குதல், வட்டுக

(4ம் பக்கம் பார்க்க)

## பலியானோர்விபரம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி சம்பவத்தில் பலியானவர்கள் விபரம் ...

இடம்பெயர்ந்து சித்தன்கேணியில் வசித்துவருபவரான செல...

## ஷெல் தாக்கு

## பாடசாலை மாணவர்கள் அதிர்ச்சியில் அலறினர்

(வட்டுக்கோட்டை)

சுப்பர் சொனிக் விமானத் தாக்குதலின்போது சித்தன்கேணி கணேச வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை பிள்ளைத்தை அ. மி. த. க. பாடசாலை, வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், பண்ணாகம் மெய்கண

(4 ம்பக்கம் பார்க்க)

## முஸ்லிம் தீவிரவாதிகள்

# இந்தியப் பிரதமர் ராவை முற்றுகையிட முயற்சி

(புதுடில்லி

இந்தியப் பிரதம மந்திரி பி. வி. நரசிம்மராவ் அடுத்த வாரம் 'சார்க்' உச்சி மகாநாட்டுக்கு ... பங்களாதேஷ் ... படை வாதிகள் தெரிவித்துள்ளனர்.

அயோத்திபிரச்னை தொடர்பாக மேற்கொண்ட தங்களது நெடும்பயணத்தை ...

(4-ம் பக்கம் பார்க்க)

சித்தன்கேணியில் சுப்பசோனிக் தாக்கு

# 9 பொதுமக்கள் பலி; 15 பேர் படுகாயம்

## 10 வீடுகள் வரை சேதம்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை பகுதியை வட்டமிட்ட ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சுப்பசோனிக் விமானங்கள் இரண்டு சித்தன்கேணிப் பகுதியில் நேற்று பொது மக்களின் குடியிருப்புகளை நோக்கி நடாத்திய கொடூரத் தாக்குதலில் 9 பொது மக்கள் கொல்லப்பட்டனர் 15 க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். 10 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுப் பகல் 11-05 மணியளவில் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை, சித்தன்கேணி பகுதிகளை மையமாகக் கொண்டு வட்டமிட்ட இரு சுப்பசொனிக் விமானங்கள், சுமார் 11-20 மணியளவில் ரொக்கட் மோட்டார், 50 கலிபர் தாக்குதல்களை நடத்தின.

வலிகாமம் பகுதியில் இதுவரை நடைபெறாத அளவிலான மிகப் பயங்கரமான இத் தாக்குதல், வட்டுக

(4ம் பக்கம் பார்க்க)

## பலியானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி சம்பவத்தில் பலியானவர்கள் விபரம் வருமாறு:

காங்கேசன் துறையிலிருந்து இடம்பெயர்ந்து சித்தன்கேணியில் வசித்துவருபவரான செல்லையா கௌரிபாலன் (19 வயது), கந்தையா பிறேம

(4-ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

சுப்பசொனிக்குண்டு வீச்சுத் தாக்குதலினால் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு:

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று இரவு பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, பனிப்புலம் ஆகிய பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மாணவர்கள் அதிர்ச்சியில் அலறினர்

(வட்டுக்கோட்டை)

சுப்பர் சொனிக் விமானத் தாக்குதலின்போது சித்தன்கேணி கணேச வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை பின்வத்தை அ. மி. த. க. பாடசாலை, வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், பண்ணாகம் மெய்கண

(4 ம்பக்கம் பார்க்க)

## முஸ்லிம் தீவிரவாதிகள் இந்தியப் பிரதமர் ராவை முற்றுகையிட முயற்சி

(புதுடில்லி)

இந்தியப் பிரதம மந்திரி பி.வி. நரசிம்மராவ் அடுத்த வாரம் 'சார்க்' உச்சி மகாநாட்டுக்கு பங்களாதேஷ் போகும்போது டாக்கா விமான நிலையத்தில்வைத்து அவரை முற்றுகை இடப்போவதாக பங்களாதேஷ் முஸ்லிம் தீவிர சமய அடிப்படை வாதிகள் தெரிவித்துள்ளனர்.

அயோத்தி பிரச்னை தொடர்பாக மேற்கொண்ட தமது நெடும்பயணத்தை [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி!

(கொழும்பு)

வசாவிளானில் படையினரின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

ஆயுதங்கள் மற்றும் சிறு பீரங்கிகள் சகிதம் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-க)

## ஆண்டு 5 தமிழ் நூல்களை வாபஸ் பெறுமாறு பணிப்பு

(கொழும்பு)

ஆண்டு 5 தமிழ் நூல்களை வாபஸ் பெறுமாறு கல்விச் சேவைகள் அமைச்சர் திருமதி சுனேத்திரா ரணசிங்கா

(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை முடிவுகளை யாழ். எடுத்துவருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை யாழ்ப்பாணம் எடுத்துவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை வட-கிழக்கின் யுத்தம் துர்அதிர்ஷ்டமானது - ஜோர்ஜ் புஷ்

(நியூயோர்க்)

இலங்கையின் வடக்கு-கிழக்கில் யுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருவதால் இலங்கையர்கள் தமது முழு ஆற்றலையும் பயன்படுத்த முடியாமல் இருப்பது துரதிஷ்டவசமானதாகும் என அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் பத்திரிகையாளர் மத்தியில் அண்மையில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில் இலங்கையின் பொருளாதார சமூக முன்னேற்றம் மிகவும் திருப்திகரமாக இருப்பதாகவும் இலங்கையின் நிலப்பரப்பு மற்றும் அது அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றகரமானது என்றார். (க-சு)

## இனப்பிரச்னை துரிதமாக தீர்த்துவைக்கப்பட வேண்டும் — ஆஸி தூதுவர்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்னை இன்றைய காலகட்டத்தில் அவசரமாகத் தீர்த்துவைக்கப்படவேண்டும். இந்த நாட்டின் அபிவிருத்திக்கு அந்தத் தீர்வானது ஒரு அவசியத் தேவையாகும்.

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் திரு. ஹவார்ட் டெபென்ஹாம் இவ்வாறு தெரிவித்தார்.

'ஆசிய ஒத்துழைப்பு' என்னும் தலைப்பில் 'மிக்' தகவல் நிலையத்தில் அண்மையில் உரை நிகழ்த்தியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீண்ட காலமாகத் தீர்வு காணப்படாமலிருக்கும் இலங்கையின் இனப்பிரச்னைக்கும், மோதல்களுக்கும் கூடிய விரை

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ ஜனாதிபதி மாளிகை முன் புலிகள் பதாகையுடன் இரு வெளிநாட்டவர் கைது

(கொழும்பு)

கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாகக் காணப்பட்ட வெளிநாட்டவர் இருவர், அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இந்த இருவரில் ஒருவர் இத்தாலியப் பெண். மற்றவர் ஜப்பானைச் சேர்ந்தவர். இத்தாலியப் பெண், தமது கையில் 'எல். ரி. ரி. ஈ.' என்று எழுதப்பட்ட பதாகை ஒன்றைப் பிடித்துக்கொண்டு ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக நிற்க, ஜப்பானியர் அவரைப் படம் பிடித்தாராம்.

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### அறிவுக் களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் - 7-வது இதழ் 12 1-93ல் வெளியாகும் வாசகர்களின் – முக்கிய மாக உயர் வகுப்பு மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதை நோக்காகக் கொண்டு இலாப நோக்கின்றி வெளிவருகிறது. பிரதி ரூபா 10/- மட்டுமே. (ஏ-2763)

### சிவாஸ் ஸ்ருடியோ இடமாற்றம்

பண்டத்தரிப்பில் இயங்கி வந்த சிவாஸ் ஸ்ருடியோ தற்பொழுது சித்தங்கேணியில் இயங்கிக் கொண்டு இருக்கிறது சிறந்த முறையில் வீடியோ, கலர் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைப் படங்கள் சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். "சிவாஸ் ஸ்ருடியோ, சித்தங்கேணி, வட்டுக்கோட்டை. (சி-7106)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். பி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 7121)

### சித்திரம்

ஆண்டு 11 1993 க. பொ. த. (சா. த. பரீட்சைப் பாடத் திட்டத்திற்கேற்பவே தயாரித்தவர் – 'யசோ, மேலைத்தேய, கீழைத்தேய கலைகளின் வளர்ச்சியும், வரலாறும். அடங்கியது. இத்துடன் அலங்காரங்களும் விளக்கப்படங்களும் தொகுதி விற்பனையாகின்றது கேட்டு வாங்குங்கள். (சி-7115)

### ஒலிவ் ஸ்நானப் பவுடர்

இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு. இயற்கை வாழ்வுக்கு எண்ணெய் முழுக்கு அவசியம் சிகைக்காய், எலுமிச்சங்கோது, பயறு. வெந்தயம் மற்றும் மூலிகை வகை கொண்டு தயாரான ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவித்துச் சுகம் காணுங்கள். அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற். (ஏ-2766)

## சடலங்களில் வெட்டுக்காயம்

(யாழ்ப்பாணம்)

## திருவாசகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவில் திருவாசகப் பெருவிழாவின் செவ்வாய்க்கிழமை காலை நிகழ்ச்சிகள் இன்று வியாழக்கிழமை காலை நடைபெறுமென ஆலய பாலனசபை சபை தெரிவித்துள்ளது.

## நீரில் மூழ்கி மரணம்

(நெல்லியடி)

கேணிக்குள் குளிக்கச் சென்ற வயோதிபமாது நீரில் மூழ்கி மரணமானார்.

இச்சம்பவம் கடந்த 5-ம் திகதி அதிகாலை 3 மணிக்கு வல்லிபுரம் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய கேணிக்குள் இடம்பெற்றுள்ளது.

இமையாணன் வடக்கு உடுப்பிட்டியில் வசிக்கும் திருமதி ஐயாத்துரை சிவக்கொழுந்து (வயது 70) என்பவரே மரணமானவராவார். (160)

## செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் வலைபந்தாட்ட நடுவர்களுக்கான செய்முறை பரீட்சை 9-ம், 10-ம் திகதிகளில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நடுவர் பயிற்சிக்கான எழுத்துப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்தவர்களை 9-ம் திகதி சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது.

## நியமனக் கடிதங்கள்

(திருநெல்வேலி)

பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்களை வவுனியாவில் சென்று பெற்றுக்கொண்ட பட்டதாரிகளுக்கு பாடசாலைக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 9-ம் திகதி யாழ் கல்வித்திணைக்களத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (157)

## இராசி பலன்

07-01-1993

(தமிழுக்கு மார்கழி 23)

வியாழக்கிழமை

சதுர்த்தசி மு. இ. 8-27

## 80 பட்டதாரிகளினது விபரம் கொழும்பு செல்கிறது

(திருநெல்வேலி)

பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கு யாழ். கல்வித்திணைக்களத்தில் நேற்று முன்தினம் மாலை பதிவு செய்துகொண்ட 80பேரினது பெயர் விபரப்பட்டியல் நேற்று கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

இப்பயிற்சிக்கு விண்ணப்பித்து கொட்டக்கலைக்கு அழைப்புக் கடிதம் வராத 44 பட்டதாரிகளினதும் அழைப்புக்கடிதம் வந்தும் போக்குவரத்து சீரின்மையால் செல்லமுடியாது இருந்த 18 பேரினதும், பரீட்சைக்கு தோற்றுமல் இருந்த 18 பேருமாக 80 பேரினது பெயர்ப் பட்டியலே கல்வியமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்விபரப்பட்டியலை கல்வித்திணைக்கள உயரதிகாரி ஒருவர் கொழும்புக்கு எடுத்துச்சென்றுர். (157-158)

## கடமை, கண்ணியம், கட்டுப்பாடு பேணப்பட வேண்டும்

(மானிப்பாய்)

கடமையுணர்வு கூட்டுப் பொறுப்பு நிர்வாகத்திறன் என்பன வீட்டிலிருந்தே ஆரம்பிக்கின்றன. கடமை, கண்ணியம் கட்டுப்பாடு, ஆகிய ஒழுக்க நெறிகள் பணியகத்திலும்பேணப்பட வேண்டும். நேரத்திற்கு அலுவலகத்திற்கு வருகை தருவதும் கூட ஒரு ஒழுக்க நெறிதான்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் விடுத்துள்ள புத்தாண்டு நற்செய்திக்குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் இவர் குறிப்பிடுகையில், இளந்தலைமுறையினர், மூத்த தலைமுறையினரின் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றப் பழகிக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு பின்பற்றினால் ஒழுக்கத்தைப்பேணும் பணியாளரின் பல நிர்வாகச் சிக்கல்கள் இலகுவாகத் தவிர்க்கப்படும் மேலும் பணியகத்தைச் செம்மைப்படுத்தினால் நாட்டின் செம்மையான அபிவிருத்திக்கு வழிவகுக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (71)

## பொதுக் கல்வி முன்னேடி பரீட்சை முடிவுகள்

(திருநெல்வேலி)

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு 1992 பெறுபேறுகளின் அடிப்படையில் பதின்மூன்று பரீட்சார்த்திகள் எட்டுப் பாடங்களிலும் சிறப்புத்திறன் பெற்றுள்ளனர். அதன்விபரம் வருமாறு:

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி-2 யா/இந்து மகளிர் கல்லூரி-2, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி-2, யா/சம்பத்திரிசியார் கல்லூரி-1, யா/பரியோவான் கல்லூரி-1, யா/வேம்படி மகளிர் கல்லூரி-1, ஹாட்லிக்கல்லூரி-1, உடுவில் மகளிர் கல்லூரி-1 சாவகச்சேரி இந்துக்கல்லூரி-1, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி-1

அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் முதன்மூன்று இடங்களையும் செல்வன் குணசேகரம் யூட்ரைரேன் யாழ்/சம்பத்திரிசியார்கல்லூரி (718 புள்ளிகள்), செல்வி சுசீலா கதிர்காமசேகரர் யா/வேம்படி மகளிர் கல்லூரி, (706புள்ளிகள்) செல்வன் ஞானப்பிரகாசம் வசந்தகுமார் யா/பரியோவான் கல்லூரி (704 புள்ளிகள்) என்போர் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கடந்த 5ம் திகதி பேற்றுடி தேர்வின் முடிவுகள் வெளியிடப்பெற்றன. கல்விப் பணிமனைகள் ஊடாக அனைத்துப்பாடசாலைகளுக்கும் அனுப்பப்பெற்றுள்ளன. தேர்வுச் சான்றிதழ்கள் பாடசாலைகளுடாகத் தேர்வுநாடிகளுக்கு விரைவில் அனுப்பிவைக்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (157-158)

## இன்று

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கோட்ட கொத்தணி அதிபர்கள் கூட்டம் இன்று வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும். சகல கொத்தணி அதிபர்களும் தவறாமல் தமது கொத்தணிக்கு பட்ட பாடசாலை அதிபர்களிடமிருந்து சீருடைக்கான சுருக்க விபரத்தை பிரிவுரீதியாக

## நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு

(நெல்லியடி)

பருத்தித்துறை துறைமுகத்தில் உள்ள 'பாஜ்' ஒன்றில், இணைக்கப்பட்டிருந்த நீரிறைக்கும் இயந்திரம் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்திருட்டுச் சம்பந்தமாக, துறைமுகப் பொறுப்பாளர், பருத்தித்துறை காவல்துறையில் புகாரிட்டுள்ளார் (16)

## பரீட்சை முடிவு

(உடுவில்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முழுநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை 1991-ல் இருபத்தேழுபேர் இம்முறை சித்தியடைந்துள்ளனர். இவர்களில் மூன்றுபேர் விசேட சித்தியும், ஒருவர் திறமைச் சித்தியும் பெற்றுள்ளனர்.

பகுதிநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் அறுபத்தொருபேர் சித்தியடைந்ததுடன் 2 பேர்விசேட சித்தியும், ஏழுபேர் திறமைச் சித்தியும் பெற்றுள்ளனர் (109)


## யாழ். வட்ட லியோ கழகம்

நடாத்தும்

"சோபனு ஆடை அகம்" ஆதரவுடனுன

## வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ் மாவட்ட பிரபல விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன

ஆரம்பம்: 8 - 01 - 1993 நேரம்: பி. ப. 2 - 30

இடம்: வேம்படி மகளிர் கல்லூரி மைதானம

காலம்: 8, 14, 17, 23, 24 - 01 - 93

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ். வட்ட லியோ கழகம்

(இ-7124)



## யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

யாழ்ப்பாணம்

ஆண்டு 6 பரீட்சை 09-01-93 சனிக்கிழமை நடைபெறும்.

10-00 -- 11-15 கணிதம்

11-30 -- 12-45 தமிழ்

அனுமதிப் பத்திரத்தைக் கல்லூரி அலுவலகத்தில் பெறுமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர்.

அதிபர்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,

யாழ்ப்பாணம். (ஏ-2767)


## ஓராண்டு நினைவஞ்சலி



சாற்றின் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்கும் எஸ். ரீ மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 7121)

### சித்திரம்

ஆண்டு 11 1993 க. பொ. த. (சா. த. பரீட்சைப் பாடத் திட்டத்திற்கேற்பவே தயாரித்தவர் - 'யசோ, மேலைத்தேய, கீழைத்தேய கலைகளின் வளர்ச்சியும், வரலாறும். அடங்கியது. இத்துடன் அலங்காரங்களும் விளக்கப்படங்களும் தொகுதி விற்பனையாகின்றது. கேட்டு வாங்குங்கள். (சி-7115)

### ஒலிவ் ஸ்நானப் பவுடர்

இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு. இயற்கை வாழ்வுக்கு எண்ணெய் முழுக்கு அவசியம் சீயக்காய், எலுமிச்சங்கோது, பயறு. வெந்தயம் மற்றும் மூலிகை வகை கொண்டு தயாரான ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவித்துச் சுகம் காணுங்கள். அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற். (எ-2766)

## சடலங்களில் வெட்டுக்காயம்

(யாழ்ப்பாணம்)

கிளாலி சம்பவத்தில் உயிரிழந்த யாழ். குடாநாட்டு பகுதியைச் சேர்ந்தவர்களின் பல சடலங்களை கிளிநொச்சிக்கும் ஆலங்கேணிக்கும் சென்று உறவினர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு நேற்று முன்தினம் இங்கு கொண்டு வந்தனர்

சடலங்களில் துப்பாக்கிச் சூடு, வெட்டுக்காயங்கள் பல காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-56)

இன்று

## மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் 'மணிவாசகர் விழா' இன்று பிற்பகல் 1 மணிக்கு வழுக்கம்பரை அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் திரு. மு. சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஆசியுரை, திருவாசக இன்னிசை, சிறப்புச் சொற்பொழிவும் மணிவாசகர்சபை நடாத்திய பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம்பெறும். (கி)

அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் வலைபந்தாட்ட நடுவர்களுக்கான செய்முறை பரீட்சை 9-ம், 10-ம் திகதிகளில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நடுவர் பயிற்சிக்கான எழுத்துப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்தவர்களை 9-ம் திகதி சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது.

## நியமனக் கடிதங்கள்

(திருநெல்வேலி)

பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்களை வவுனியாவில் சென்று பெற்றுக்கொண்ட பட்டதாரிகளுக்கு பாடசாலைக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 9-ம்திகதி யாழ் கல்வித்திணைக்களத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (157)

## இராசி பலன்

07-01-1993

(தமிழுக்கு மார்கழி 23)

வியாழக்கிழமை

சதுர்த்தசி மு. இ. 8-27 வரை, மிருகசீர்டம் ந. ஈ. 11-57 வரை, இராகுகாலம் பி. ப. 2-02 முதல் 3-32 வரை. சுபநேரம் காலை 8-02 முதல் 9-32 வரை. மரணயோகம். இரவு நடேசர் ஆர்த்திரா அபிஷேகம்.

மேடம்- வித்தியாலாபம், சத்துருஜயம், மனமகிழ்ச்சி.

இடபம்- ஸ்தானபேதம், வியாதியால் கவலை, அலைச்சல்.

மிதுனம்- உற்றார் மூலம் உதவி, அதிக பிரசங்கம், காரியவெற்றி.

கடகம்- ஸ்திரிபகை, பணமுடை, காரிய தாமதம்.

சிம்மம்- எதிர்பார்த்த உதவி, வாக்கு வன்மை, குடும்பசுகம்.

கன்னி- தொழில்பெருமை, தெய்வபலம், மனையாள் நன்மை.

துலாம்-இடமாற்றம், மனக்குறை, வேண்டாத உதவி.

விருச்சிகம்- சோளிஞரால் கலகம், நோய் பயம், வேதனை.

தனுசு- சுபகாரியம், இனிய உறவு, தொழில் கூட்டுறவு.

மகரம்- பந்துசோகை, விருந்துவைபவம், பணவரவு

கும்பம்- இடையூறு புத்திர சோகம், அதிகயோசனை.

மீனம்- மனக்கிலேசம், பயணக் கஷ்டம், வாக்குப் பகை.

- ஜோஸ்யர்.

கத்தர்களுக்கும் விடுத்துள்ள புத்தாண்டு நற்செய்திக்குறிப் ... எழிவதுக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (71)

## பொதுக் கல்வி முன்னோடி பரீட்சை முடிவுகள்

(திருநெல்வேலி)

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு 1992 பெறுபேறுகளின் அடிப்படையில் பதின்மூன்று பரீட்சார்த்திகள் எட்டுப் பாடங்களிலும் சிறப்புத்திறன் பெற்றுள்ளனர். அதன்விபரம் வருமாறு:

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி-2 யா/இந்து மகளிர் கல்லூரி-2, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி-2, யா/சம்பத்திரிசியார் கல்லூரி-1, யா/பரியோவான் கல்லூரி-1, யா/வேம்படி மகளிர் கல்லூரி-1, ஹாட்லிக்கல்லூரி-1, உடுவில் மகளிர் கல்லூரி-1 சாவகச்சேரி இந்துக்கல்லூரி-1, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி-1

அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் முதன்மூன்று இடங்களையும் செல்வன் குணசேகரம் யூட்ரைரேன் யாழ்/சம்பத்திரிசியார்கல்லூரி (718 புள்ளிகள்), செல்வி சுசிலா கதிர்காமசேகரர் யா/வேம்படி மகளிர் கல்லூரி, (706புள்ளிகள்) செல்வன் ஞானப்பிரகாசம் வசந்தகுமார் யா/பரியோவான் கல்லூரி (704 புள்ளிகள்) என்போர் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கடந்த 5ம் திகதி மேற்படி தேர்வின் முடிவுகள் வெளியிடப்பெற்றன. கல்விப் பணிமனைகள் ஊடாக அனைத்துப்பாடசாலைகளுக்கும் அனுப்பப்பெற்றுள்ளன. தேர்வுச் சான்றிதழ்கள் பாடசாலைகளூடாகத் தேர்வுநாடிகளுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (157-158)

## தமிழ்த்துறை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையில் 13-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு "இன உணர்வுக் கவிதைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் — காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை கவிதைகள் பற்றிய ஆய்வு" என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கை நடாத்தவுள்ளது.

இவ்விடயம்பற்றி தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் செல்வி க. சந்திரா கருத்துரை வழங்குவார்.

## தமிழ்நாடு இருளில் மூழ்கியது

(சென்னை)

தமிழ்நாடுமுழுவதும் நேற்று முன்தினம் இரவு திடீரென மின்சாரத் தடை ஏற்பட்டு, இருளில் மூழ்கியது.

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள பாரிய மின்உற்பத்தி ஆலையில் ஏற்பட்ட கோளாறே, தமிழ்நாட்டு மின்சாரத் தடைக்கு முக்கிய காரணமென்றும் இக்கோளாறு நேற்று இரவு சீர்செய்யப்பட்டதாக மின்சார இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கோட்ட கொத்தணி அதிபர்கள் கூட்டம் இன்று வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும். சகல கொத்தணி அதிபர்களும் தவறாமல் தமது கொத்தணிக்குட்பட்ட பாடசாலை அதிபர்களிடமிருந்து சீருடைக்கான சுருக்க விபரத்தை பிரிவுரீதியாக கொண்டுவந்து நேரில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

## கப்பலில் மாணவர் சீருடை

(கொழும்பு)

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகளும், அப்பியாசக் கொப்பிகளும் திருமலையிலிருந்து புறப்படும் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாக பரீட்சைத் திணைக்களம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. (அ-க)

## ஒன்றுகூடல்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் புதுவருட தினத்தன்று செயலகத்தின் சில பிரிவுகளிலுள்ள உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து ஒன்றுகூடல் நிகழ்ச்சியொன்றை நடாத்தினார்கள்.

செயலக பிரதான கணக்காளர் திரு. ச. சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பலரும் உரையாற்றியதுடன் தேநீர் விருந்துபசாரமும் இடம்பெற்றது. -71


யாழ். வட்ட லியோ கழகம்

(இ-7124)

### யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

யாழ்ப்பாணம்

ஆண்டு 6 பரீட்சை 09-01-93 சனிக்கிழமை நடைபெறும்.

10-00 -- 11-15 கணிதம்

11-30 -- 12-45 தமிழ்

அனுமதிப் பத்திரத்தைக் கல்லூரி அலுவலகத்தில் பெறுமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர்.

அதிபர்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (ஏ-2767)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் நவரத்தினம் சிவஞானம்

(ஞானம்)

தோற்றம்: 11-12-1925 மறைவு: 07-01-1992

அன்புமிகு கணவனாக
பாசமிகு தந்தையாக
உயர் பண்பு மிகு சுவனாக
எமக்கெல்லாம் வழிகாட்டிய நீங்கள்
அங்கொரு சொர்க்கத்தில் அமர்ந்து
ஓராண்டு ஆகின்றதோ.

என்றும் உங்கள் நினைவுடன்
திருமதி கதிரமணி சிவஞானம் (மனைவி)
சுபாஸ்கர் குடும்பத்தினர்,
செந்தில்வாசன் குடும்பத்தினர்.

"இரத்தினவாசா",
கல்லூரி வீதி,
மானிப்பாய். (இ-7123)

★ யாழ். குடாவில் படைநடவடிக்கையால்

# ஒன்றே முக்கால் லட்சம் பேர் தொழில் வாய்ப்பின்றி கஷ்டம்

(உடுவில்)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ். குடாநாட்டில் லட்சக்கணக்கான மக்கள் சுயதொழில் முயற்சிகளை கைவிட்டும், வேலைவாய்ப்புக்களை இழந்தும் உள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தகவல் குறிப்பேடு இவ்வாறு தெரிவிக்கின்றது.

குடாநாட்டில் பெரும்பாலான தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன. இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் மூடப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட இத்தொழிற்சாலைகளிலும் தொழில் நிறுவனங்களிலும் வேலைசெய்து வந்த லட்சக்கணக்கான தொழிலாளர்கள், ஊழியர்கள் தமது வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.

சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுவந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது முயற்சிகளை கைவிட்டு விட்டன.

சுமார் எண்பதினாயிரத்துக்கும் கூடுதலான மக்கள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். சுமார் ஒன்றரை லட்சம் பேர் வரையில் தாம் பார்த்து வந்த தொழில்களை இழந்த நிலையில் வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் கஷ்டமுள்ளனர் எனவும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் குறிப்பிட்டுள்ளது. (109)

புறநிலை படிப்புகள் அலகின்

# புகைப்படக்கலை பயிற்சிக்கு பெருமளவில் விண்ணப்பம்

(நல்லூர்)

யாழ். பல்கலைக்கழகத்தில் புறநிலை படிப்புகள் அலகினால் ஆரம்பிக்கப்படவுள்ள புகைப்படக்கலை பற்றிய அறிமுகப் பயிற்சிக்கு அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர். இதுவரை 250க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலாவது பயிற்சிவகுப்பில் 75பேர் வரையே அனுமதிக்கப்படுவர் எனவும் இவர்களை தெரிவுசெய்யும் வேலை நடைபெறவுள்ளதாகவும் அதன் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சிநெறி மூன்று பிரிவாக நடாத்தப்படுமெனவும், இப்பயிற்சியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விரிவுரைகள் செய்முறைப்பயிற்சிகள் ஆகியவை வழங்கப்படுமெனவும், இப்பயிற்சி நெறியில் பங்குபற்றுபவர்களுக்கு ஆண், பெண் வேறுபாடோ வயது வேறுபாடோ தடையாக இருக்காது எனவும் தெரியவருகிறது. (158)

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு

# விவசாய செய்கை பெருமளவில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாப்பகுதியில் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக விவசாயசெய்கை பெருமளவு பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது உப உணவுப் பயிர்களான கத்தரி மிளகாய், புகையிலை வெங்காயம் போன்ற பயிர்களின் நடுகைக்காலம் ஆரம்பித்துள்ளதை யடுத்து விவசாயிகள் பெரும் அச்சம் கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

## மண்ணெண்ணெய் வந்தது

(யாழ்ப்பாணம்)

கிளாலி ஊடாக நேற்றுமுன்தினம்பெருமளவுமண்ணெண்ணெய் பரல்கள் யாழ். குடாவுக்கு எடுத்துவரப்பட்டன. (159)

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின்

# 68வது பிறந்த தின அறக்கொடை வைபவம்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 68வது பிறந்த தின அறக்கொடை வைபவம் இன்று 7ம் திகதிவியாழக்கிழமை காலை 8-30மணிக்கு தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் மேற்படி வைபவத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வாழும் வழி என்ற நூல் வெளியீட்டுரையும் கவிஞர் சோ. பத்மநாதன் நூல் நயப்புரையும் நிகழ்த்தவுள்ளனர்.

விசேட அபிடேகம், மற்றும் மதியபோசன வைபவமும் இடம்பெறவுள்ளன. (க)

## "ஆயிரம் பிறை கண்டு வாழி"

தெல்லிநகர்த் துர்க்கை அடிபணிந்து
தேசத் தொண்டு புரிவோய்
அல்லல் உற்றுஉனை அணுகுவோர்க்கு
அள்ளிப் பொருளீந் துவப்போய்
சொல்லொடு செயலுஞ் சேர்ந்தொன்றாய்
சோர்விலா துழைப்போய்
நல்லஉளத் தங்கம்மா எனுந்தாயே
நலமுடன் வாழிநீடு.

தெங்கு மா பலா கமுகு சூழ்ந்த
தெல்லியூர்ப் பதியில்
சிங்கமிசை அமரும் நற்தேவிக்கு
சீர்பெறு கோவிலமைத்தோய்
மங்கையர் போற்றிஏற்றும் வண்ணம்
மகிழ்வுறு பணிபுரிவோய்
அங்கையிலனலேந்து ஆடும்பிரானருளால்
ஆயிரம் பிறைகண்டு வாழி

சி. சபாநாதன்

(இன்று பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 68-வது பிறந்த நாள்.)

25பில. டாலர் செலவில்

# குழந்தைகளை பாதுகாக்க புதிய திட்டம் உருவாகிறது

(கொழும்பு)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள குழந்தைகளை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்காக சுமார் இருபத்தைந்து பில்லியன் டாலர் செலவில் மேற்கொள்ளக் கூடியதான திட்டம் ஒன்றினை யும் யூனிசெவ் நிறுவனம் அமைத்துள்ளதாக தெரியவருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் யூனிசெப் நிறுவனம் வறுமைப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்கும் தனது திட்டத்தின் கீழ் குழந்தைகளின் சிறுவயதில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தல், போஷாக்கின்மை குறைபாட்டினைக் குறைத்தல், சுத்தமான குடிநீர் வசதிகளை அமைத்துக்கொடுத்தல், சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல், குடும்பக்கட்டுப்பாட்டு முறையை கடைப்பிடிக்கத் தூண்டுதல் போன்ற பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்த உள்ளதாகவும் தெரியவருகின்றது. (108)

# திருமலை அகதிகள் சொந்த கிராமங்களில்குடியேறமறுப்பு

(கொழும்பு)

திருகோணமலைப் பிரதேசத்திலுள்ள ஆலங்கேணி, ஈச்சந்தீவு, சுங்கான்குழி ஆகியபகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து கிளப்பன்பேர்க் அகதி முகாமில் வாழும் தமிழ்மக்களை இம்மாத இறுதிக்குள் அவரவர் கிராமங்களில் மீளக்குடியேற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தஅகதிகள் தமது சொந்தக் கிராமங்களில் மீளக் குடியேற முடியாத நிலையில் உள்ளனர்.

காணிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் யுத்த நிலைமையினால் அவர்களது வீடுகள் அழிக்கப்பட்டும் சேதமடைந்தும் உள்ளன என்றும் கூறப்படுகிறது.

மீளக்குடியேறினால் தொழில் வாய்ப்புக்கள் கூட இல்லை என்றும் விவசாயம், கால்நடை தொழில் செய்யும் பகுதி தடைசெய்யப்பட்ட பிரதேசமாக உள்ளது என்றும் கூறப்படுகிறது.

முஸ்லிம்கிராம மக்களாலும் முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் மீளக்குடியமர முடியாதெனதமிழ்அகதிகள் மறுத்துள்ளனர். (54)

# அமைச்சரவையில் மாற்றம்

## ஹமீத் வெளிவிவகார அமைச்சர்?

(கொழும்பு)

அமைச்சரவையில் அடுத்த சில தினங்களில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் புதிய முகங்கள் புதிதாக அமைச்சரவையில் இடம்பெறலாம் எனவும் நம்பகரமாக தெரியவருகிறது.

நீதி உயர் கல்விஅமைச்சராக கடமையாற்றும் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார்.

வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா புனர்வாழ்வு அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளையில் கொழும்பு மாவட்ட எம். பி. ஹட்சன் சமரசிங்க தகவல்துறை இராஜாங்க அமைச்சராகவும், தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ ஜே. ரணசிங்க ஜனசக்தி திட்டத்திற்கு பொறுப்பாளராவும் நியமிக்கப்படவுள்ளனர்.

மூன்று சிரேஷ்ட அமைச்சர்களின் பொறுப்புகள் இறக்கப்பட்டு அவர்கள் பதவி இறக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-க)

# புதிய பயிற்சிகளை ஆரம்பிக்க யாழ்.பல்கலைக்கழகம்முடிவு

(நல்லூர்)

யாழ். பல்கலைக்கழகத்தின் புறநிலை படிப்புகள் அலகு மேலும் பல புதிய பயிற்சி வகுப்புகளை யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயம், பத்திரிகைக் கலை, நாடகமும் அரங்கியலும் ஓவிய சிற்பக் கலை, மீன்பிடி அபிவிருத்தி ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழகத்தை சமூகத்துடன் இணைக்கும் நோக்குடனே புறநிலைப் படிப்புகள் அலகு ஆரம்பிக்கப்பட்டதாகவும் இப்பயிற்சியை தொடர்பவர்களுக்கு வயதுவரம்பு கிடையாதெனவும் அதன் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இத்திட்டம் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு "டிப்புளோமா" பயிற்சிநெறிகளை ஆரம்பிக்க தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (158)

# 'கறுப்புபட்டியலில்' இலங்கையின் பெயர்

(கொழும்பு)

குறிப்பிட்ட சில மேற்கு நாடுகளின் 'கறுப்புப்பட்டியலில்' இலங்கையின் பெயரும் இடம்பெற்றுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாஸ்போட், விசா மோசடி மற்றும் இவ்விவகாரங்களில் பல கள்ள நடவடிக்கைகள் மூலமே இலங்கை இவ்வாறு அவப்பெயரை பெற்று 'கறுப்புப் பட்டியலில்' இடம் பெற்றுள்ளதாம்.

இதனால் நேர்மை, நாணயமிக்க இலங்கையர்கள் பலர் வெளிநாடுகளில் அவப்பெயர்களையும், பலத்த சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளனராம். (இ)

# அங்கிலிக்கன் ஆயர் நாளை யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மாவட்டத்தின் புதிய ஆயர் ஜோர்ச் கெனத் பெர்ணாண்டோ ஆறுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை யாழ். நகருக்கு வருகின்றார்.

ஆயர் கிளிநொச்சியில் இன்று பலசமயநிகழ்ச்சிகளில்பங்குபற்றிய பின்பு, 8ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் நகருக்கு விஜயம்செய்கிறார் 11ம் திகதி யாழ். பரியோவான் தேவாலயத்தில் நடைபெறும் சமய நிகழ்ச்சி உட்படபல நிகழ்ச்சிகளிலும் அவர் பங்குபற்றுவதுடன், கத்தோலிக்க திருச்சபையின்யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையையும், மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து, யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமை பற்றியும் கேட்டறிவார்.

ஆயர் பெர்ணாண்டோ 13ம் திகதி கொழும்பு திரும்புவார். [வி-159]

# கிளாலி சம்பவம்: சமாதானக் கதவுகளை நிரந்தரமாக மூடிவிடும்

## புலிகள் லண்டன் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

கிளாலி கடற்பகுதியில் கடற்படையினர் பொதுமக்கள் பயணம் செய்த படகுகள் மீது மிருகத்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை விடுதலைப்புலிகளின் லண்டன் அலுவலகம் வன்மையாக கண்டித்துள்ளதாக, வெரித்தாஸ்' வானொலி நேற்று தெரிவித்துள்ளது.

படையினரின் இந்த கண்மூடித்தனமான செயல், திறந்திருக்கும் சமாதானக் கதவுகளை நிரந்தரமாக மூடிவிடச் செய்துவிடும் என்றும், அப்பாவிப் பொதுமக்கள் மீது படையினர் நடாத்திவரும் கோரத்தனமான தாக்குதல்களை அரசு உடனடியாக நிறுத்தாவிட்டால், சமாதான முயற்சிகள் யாவும் சீர்குலைந்துவிடும். என்றும் விடுதலைப்புலிகள் அரசை கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளதாகவும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. (வி)

### சந்தேகப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னங்களும் பதிவு செய்யும் முறை ஒன்று அமுல்படுத்தப் படவுள்ளது இது பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப் படும்.

வாகனங்கள் புதிதாக விற்போரும், வாங்குவோரும் தங்களால் வழங்கப்படும் பற்றுச் சீட்டுக்களின் இரு பகுதியாலின் குடும்ப அட்டைகளின் இலக்கங்கள் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். கடைகளில் புதிதாக விற்போர் வாகனம் வேண்டுபவரின் குடும்ப அட்டையை உறுதிப்படுத்திய பின்பு அதன் இலக்கத்தைக் குறித்து பற்றுச்சீட்டு வழங்க வேண்டும்.

ஸ்ரீலங்காஇராணுவம் இந்த தேசத்துரோகிகளை எல்லா மட்டங்களிலும் பயன்படுத்துகிறார்கள். அதற்கு சான்றாக ஏற்கனவே கைது செய்யப் பட்ட ஐவரின் பெயர்களை வெளிப்படுத்தினர்.

★ படைவீரசிங்கம் கதிரவேலு (வயது 46) இலங்கை போக்குவரத்துச்சபை இரேஷ்ட சாலைப் பரிசோதகர் நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு கொக்குவில்.

★ வல்லிபுரம் சந்திரசேகரம்அகிலதுசந்திரன் (வயது32) வியாபாரம் செய்பவர் 17-ம் கட்டை, வல்லிபுலம் புதுக் குடியிருப்பு.

★ சின்னத்துரை ஸ்ரீ தரன் (வயது 39) இலங்கை போக்குவரத்துச் சபை சாலைப்பரிசோதகர், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு

### மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறிய வசதி படைத்தோர் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களும்) கீழ்வரும் நேர அட்டவணைப் பிரகாரம் தமது மீட்பு நிதியைச் செலுத்தலாமெனத் தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் திரு. வெற்றி அரசன் தெரிவித்துள்ளார்.

இன்று வியாழக்கிழமை, நாளை வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் பிற்பகல் 3-00முதல் 3-30மணி வரையும் 9ம் திகதி சனி கிழமையும், 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 00 முதல் 10-00 மணி வரையும் மீட்பு நிதியைச் செலுத்தலாம் என்றும், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் வைத்து மீட்பு நிதி பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஈ)

### அரச தேவைகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டர்கள் திடீரென பெறப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் பாதுகாப்புப் படையினர் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகள் திடீரென பாதிக்கப்படுகிறதாம்.

அண்மையில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றிற்காக பாதுகாப்புப்படையிடமிருந்து இரண்டு ஹெலிகொப்டர்கள் திடீரென பெறப்பட்டதால் மீதியாக ஒரே ஒரு ஹெலிகொப்டர்கள் மாத்திரமே பாதுகாப்புப்படையினரின் தேவைக்காக எஞ்சியிருந்தது.

குறிப்பிட்ட இந்தத் தினத்தில வடக்குப் கிழக்குப் பகுதியின் பாதுகாப்பு வேலைகள் இதன் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள்

### பலியானோர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாஸன் (17 வயது, சித்தன் கேணி, காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து சித்தன் கேணியில் தங்கியிருந்தவரான திருமதி கமலாம்பாள் இராஜதுரை 43 வயது., பெரிய விளானிலிருந்து இடம் பெயர்ந்து மானிப்பாய் அந்தோனியார் கோயில் அகதி முகாமில் தங்கியிருப்தவரான யோகன் டயாணி உதயகுமார் 23 வயது), தெல்லிப் பளையிலிருந்துஇடம்பெயர்ந்து சித்தன்கேணியில் தங்கியிருப்பவரான சுப்பிரமணியம் சிவநாதன் (48 வயது).

எஞ்சிய நால்வரின் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (56)

### ஜனாதிபதி மாளிகை முன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன் அனுமதியின்றி இவர்கள் படம் பிடிப்பதில் ஈடுபட்டிருந்ததை அவதானித்த பாதுகாப்பு அதிகாரிகள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார், இவ்விருவரையும் கைதுசெய்து கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இத்தாலியப் பெண் வைத்திருந்த பதாகையில் 'எல். ரி. ரி. ஈ.' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததாம். இது ஆங்கிலப் பதமா? அல்லது வேற்று மொழிப் பதமா? என்பது உடனடியாகத் தெரியவில்லை. 54)

### சித்தன்கேணியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டை-சித்தன்கேணி வீதியில் உள்ள முரளி இறைண்டிங் மில்லுக்கு முன்பாகவும், சித்தன்கேணி பாதர் சந்திச் சந்தியிலும், திரு. பொன்னம்

## கிளாலிசம்பவத்தில் மேலும் 50 பேரைக் காணவில்லை

(கொழும்பு)

கிளாலி கடற்பரப்பில் பொதுமக்கள் பிரயாணம் செய்த படகுகள்மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் கடந்த 2ம் திகதி மேற்கொண்ட தாக்குதலில் மேலும்50பேர்காணாமற் போனதாகவும், அநேகமாக இவர்கள் அனைவரும் இறந்திருக்கலாம் எனவும் கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் வாதிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் இத்தாக்குதலில் கொல்லப்பட்டவரின் சடலங்கள் கிளாலிக்கடற்கரையில் கரையொதுங்குவதாகவும், அச்சடலங்களில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் 15 பொது மக்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. (ஈ)

## யாழ். வாவி — தடைசெய்யப்பட்ட பிரதேசமாம்

(கொழும்பு)

யாழ்ப்பாண வாவி என அழைக்கப்படும் பிரதேசம் அனைத்தும் தடைசெய்யப் பட்ட வலயம். என்பதை பாதுகாப்பு அமைச்சு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 13-ம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட இந்தத் தடை இன்னும் அமுலில் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று மீண்டும் அறிவித்துள்ளது

கடற்படைத்தளபதியின் அனுமதியின்றி இக்கடல் வலயத்தில் செல்லும் படகுகள் அனைத்தும் குற்றம் விளைவித்ததாகவே கருதப்படுமென்று பாதுகாப்பு அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (வ

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் மேலும் 8000பேர் நியமனம்

(கொழும்பு)

மேலும் 8,000 பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு வழங்கப் படும் என அரசு அறிவித்துள்ளது.

இந்த 8 ஆயிரம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் முடிவுக்குள் நியமனம் வழங்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும். இத்திட்டத்தின் கிராமப்புற பகுதிகளில்உள்ள பாடசாலைகளில் தற்போது நிலவிவரும் ஆசிரியர் பற்றுக்குறை நீங்கிவிடும் என்றும் அரசு அறிவித்துள்ளது. (வி)

### இனப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் தீர்வு காணப்பட வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் சமாதான முறையில் இதற்கு ஒரு தீர்வு ஏற்படும் என்றும். முன்போல் சகல மக்களும் இந்த நாட்டில் ஒற்றுமையுடன் வாழமுடியும் எனவும் நான் நம்புகிறேன்.

சகல இனமக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வின் அடிப்படையில் தற்போதைய நெருக்கடி தீர்க்கப்பட வேண்டும். (இ-54)

### முஸ்லிம்

### நீடிப்பு

(யாழ்ப்பாண..)

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட சபையில் கழகங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான திகதி எதிர்வரும் 14-ம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களிலும், அவ்வவ் வட்டப் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### குமண புறப்பட்டது

(நெல்லியடி)

பருத்தித்துறையில். பொருட்களை இறக்கிய குமண கப்பல் கடந்த 5ம் திகதி மாலை, கொழும்புக்கு புறப் பட்டது. (இ-169)

### க. பொ. த.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சை மாணவர்கள் இனி

வங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

வாகனங்கள் புதிதாக விற்போரும், வாங்குவோரும் தங்களால் வழங்கப்படும் பற்றுச் சீட்டுக்களில் இரு பகுதியாரின் குடும்ப அட்டைகளின் இலக்கங்கள் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். கடைகளில் புதிதாக விற்போர் வாகனம் வேண்டுபவரின் குடும்ப அட்டையை உறுதிப்படுத்திய பின்பு அதன் இலக்கத்தைக் குறித்து பற்றுச்சீட்டு வழங்க வேண்டும்.

ஸ்ரீலங்காஇராணுவம் இந்த தேசத்துரோகிகளை எல்லா மட்டங்களிலும் பயன்படுத்துகிறார்கள். அதற்கு சான்றாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட ஐவரின் பெயர்களை வெளிப்படுத்தினார்.

★ படைவீரசிங்கம் கதிரவேலு (வயது 46) இலங்கை போக்குவரத்துச் சபை இரேஷ்ட சாலைப் பரிசோதகர் நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு கொக்குவில்.

★ வல்லிபுரம் சந்திரசேகரம்அலைதுசந்திரன் (வயது32) வியாபாரம் செய்பவர் 17-ம் கட்டை, வல்லிபுலம் புதுக் குடியிருப்பு.

★ சின்னத்துரை ஸ்ரீ தரன் (வயது 39) இலங்கை போக்குவரத்துச் சபை சாலைப்பரிசோதகர், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்.

★ நடராசா (வயது 38) வியாபாரம் 7ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

★ வல்லிபுரம் சிவபாதம், (வயது 40) வியாபாரம், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

இவர்களைப் போன்றவர்களால்தான் ஓமந்தை மாணிக்க வளவு, யாழ். பிரதான பஸ் நிலையம் (மணிக்கூரல்' யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். இந்துக்கல்லூரி மைதானம், கொம்படி ஆகிய இடங்களில் குண்டுவீச்சு சம்பவங்கள் நடந்துள்ளன.

இதை உறுதிசெய்யுமுகமாக தமிழீழ பிரதேசத்துக்குள் இலங்கை இராணுவத்தினரால் மறைத்து வைக்கப்பட்டு, கொடுத்துவிடப்பட்டுள்ள வெடிமருந்துகளும், வெடிப்பதற்குரிய பொருட்களும் சான்றாக உள்ளன.

அத்தோடு கோப்பாயில் விடுதலைப் புலிகள் வாகனம் மீது இடம்பெற்ற கைக்குண்டும் இராணுவத்தால் தற்போது உபயோகிக்கப்படும் யூகோஸ்லாவியா கைக்குண்டு என்றும் சொன்னார். (இ-சு)

3-00முதல் 3-30மணி வரையும் 9ம் திகதி சனி கிழமையும், 10ம் திகதி ஞாயிறு கிழமையும் காலை 9 00 முதல் 10-00 மணி வரையும் மீட்பு நிதியைச் செலுத்தலாம் என்றும், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் வைத்து மீட்பு நிதி பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

### அரச தேவைகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டர்கள் திடீரென பெறப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் பாதுகாப்புப் படையினர் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகள் திடீரென பாதிக்கப்படுகிறதாம்.

அண்மையில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றிற்காக பாதுகாப்புப்படையிடமிருந்து இரண்டு ஹெலிகொப்டர்கள் திடீரென பெறப்பட்டதால் மீதியாக ஒரே ஒரு ஹெலிகொப்டர் மாத்திரமே பாதுகாப்புப்படையினரின் தேவைக்காக எஞ்சியிருந்தது.

குறிப்பிட்ட அந்தத் தினத்தில வடக்குக் கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு வேலைகள் இதன் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது. (இ)

### காயமடைந்தோர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாகியப்பிட்டியைச் சேர்ந்தவரும் சித்தன்கேணியில் தற்போது வசிப்பவருமான சிவக்கொழுந்து சந்திரகுமார் (2? வயது), பொன்னம்பலப் சிவசாமி (50 வயது சித்தன்கேணி) சுப்பிரமணியம் சதாசிவம் (55 வயதுசித்தன்கேணி காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாமில் வசித்து வருபவர்ளான செல்வி சுபாசினி தியாகராசா 15 வயது', செல்வி தியாகினி தியாகராசா (18 வயது) இராஜதுரை ரஜீவ் குமார் (13 வயது). ஆறுமுகம் சரவணபவான் (35 வயது, சித்தன்கேணி). தெல்லிப்பழையிலிருந்து இடம் பெயர்ந்து சித்தன்கேணி வடக்கில் தங்கியிருப்பவரான திருமதி பூமணி அமிர்தரட்ணம் 66 வயது

இறுகாயங்களுக்குள்ளான பலர சங்கானை மானிப்பாய் வைத்திசாலைகளில் சிகிச்சை பெற்றனர்.

வரான சுப்பிரமணியம் சிவநாதன் (48 வயது).

எஞ்சிய நால்வரின் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (56)

### ஜனாதிபதி மாளிகை முன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன் அனுமதியின்றி இவர்கள் படம் பிடிப்பதில் ஈடுபட்டிருந்ததை அவதானித்த பாதுகாப்பு அதிகாரிகள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார், இவ்விருவரையும் கைதுசெய்து கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இத்தாலியப் பெண் வைத்திருந்த பதாகையில் 'எல். ரி. ரி. ஈ.' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததாம். இது ஆங்கிலப் பதமா? அல்லது வேற்று மொழிப் பதமா? என்பது உடனடியாகத் தெரியவில்லை. 54)

### சித்தன்கேணியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டை-சித்தன்கேணி வீதியில் உள்ள முரளி இறைவண்டிமில்லுக்கு முன்பாகவும், சித்தன்கேணி பாதர் சமீகச் சந்தியிலும். திரு. பொன்னம்பலம் சிவசாமி, திரு. அ. பரமகுருநாதன் ஆகியோரின் வீடுகளுக்கு அருகிலும் இடம் பெற்றது.

இக்கொடூர சம்பவத்தின் போது 5 பேர் ஸ்தலத்தில் பலியானதாகவும், 4பேர் ஆஸ்பத்திரியில் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயம் அடைந்தவர்கள் அனைவரும் உடனடியாக வாகனத்தில் ஏற்றப்பட்டு, யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இரண்டு யுவதிகள் காயங்களுடன் டச்சு வீதியால் சுழிபுரம் பக்கமாகசென்றபோது, பனைமூலையில் மயங்கி வீழ்ந்தனர் எனவும் இளைஞர்கள் அவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த ஏனையோர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பதாகவும் உயிரிழந்தோரின் சடலங்கள் யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் 7 பேரின் சடலங்கள்இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மேலும் இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்படாதநிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-இ-139-72-56)

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் மேலும் 8000பேர் நியமனம்

(கொழும்பு)

மேலும் 8,000 பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இந்த 8 ஆயிரம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் முதவகுதி நியமனம் வழங்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும். இத்திட்டத்தினால் கிராமப்புற பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தற்போது நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை நீங்கிவிடும் என்றும் அரசு அறிவித்துள்ளது. (வி)

### இனப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் தீர்வு காணப்பட வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் சமாதான முறையில் இதற்கு ஒரு தீர்வு ஏற்படும் என்றும், முன்போல் சகல மக்களும் இந்த நாட்டில் ஒற்றுமையுடன் வாழமுடியும் எனவும் நான் நம்புகிறேன்.

சகல இனமக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வின் அடிப்படையில் தற்போதைய நெருக்கடி தீர்க்கப்பட வேண்டும். (இ-54)

### முஸ்லிம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பின்னர் முஸ்லிம் சமய அடிப்படை வாதிகள் நடத்திய கூட்டத்தில் மேற்கண்ட முடிவைத் தெரிவித்ததாக அறிய வருகின்றது.

இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்குமிடையில் உள்ள ராஜதந்திர உறவைத் துண்டிப்பதோடு, ஏழு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் பங்களாதேஷ் அரசாங்கத்துக்கு இந்த முஸ்லிம் சமய அடிப்படைவாதிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ளதென்றும் கூறப்படுகிறது. (சு)

### பாடசாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டான் மகா வித்தியாலய மாணவர்கள் கூக்குரலிட்டு அதிர்ச்சியடைந்து கதறி அழுது அல்லோலகல்லோலப்பட்டனர்.

மாணவர் சிலர் ஆசிரியர்களின் கட்டுப்பாட்டையும் மீறி பாடசாலைகளை விட்டு வீடுகளுக்கு ஓட்ட மெடுத்தனர்.

அதிபர்கள் சிலர் பெரும்பீதியடைந்து தமது பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் நிலத்தில் படுக்க வைத்து அமைதியாக இருக்கச் செய்தனர். பெற்றோர்கள் தமது பிள்ளைகளைத் தேடி பாடசாலைகளுக்குப் படையெடுத்தனர். (139)

## நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட சபையில் கழகங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான திகதி எதிர்வரும் 14-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களிலும், அவ்வவ் வட்டப் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## குமண புறப்பட்டது

(நெல்லியடி)

பருத்தித்துறையில், பொருட்களை இறக்கிய குமண கப்பல் கடந்த 5ம் திகதி மாலை, கொழும்புக்கு புறப்பட்டது. (இ-169)

### க. பொ. த.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சை முடிவுகள் கிளிநொச்சியில் தேங்கியுள்ளதாகவும் தற்போது நிலவும் போக்குவரத்து சிரமமையால் பரீட்சை முடிவுகளை எடுத்து வரப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (159)

### ஆசனடு-5

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கு மாகாண கல்விச் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

இந்தப் பாடநூலில் முஸ்லிம்களுக்கு எதிராகப் பாடங்கள் அமைந்திருப்பதாக முஸ்லிம் கலாசார அமைச்சர் ஏ. எஸ். எம். அஸ்வர் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை அடுத்தே மேற்படி பாட நூல் வாபஸ் பெறப்பட்டது எனத் தெரிய வருகிறது. (சு)

### ஷெல் தாக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இரவு சுமார் 7மணியிலிருந்து 7-30 மணிவரை நடாத்தப்பட்ட இத்தொடர் ஷெல் தாக்குதலையடுத்து பெருமளவு மக்கள் மூட்டைமுடிச்சுகளுடன் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறிய வண்ணம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி ஷெல் தாக்குதலினால் பலருக்கு காயம் அல்லது உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (இ-க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி மேற்கு வீதி,63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B